<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 448/2014**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – வா.சா.2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலாமணி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 20.01.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஜனவரி 20ம் நாள் சாட்சியம்.

---

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. இந்த வழக்கின் வாதி எனது கணவர் ஆவார். எனது மாமனார் பெயர் நாச்சிமுத்து. எனது மாமனார் கிரையம் வாங்கிய ஆவணத்தை நான் பார்த்து இருக்கிறேன். 27.06.1955–ம் தேதியன்று எனது மாமனார் க.ச.எண்.336 க்கு கட்டுப்பட்ட 12 ஏக்கர் 95 செண்ட் விஸ்தீரணத்தில் 1/3 பாகத்தினை கிரையமாக வாங்கினார். அந்த பத்திரத்தில் க.ச.336–ல் பொதுவில் 1/3 பாகமாக பு.ஏ.4.31 2/3 என்று விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறாகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆன ஆவணம் எனது மாமனார் கிரையம் பெற்ற ஆவணம் கிடையாது. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் 4வது பத்தியில் எனது கணவரின் தகப்பனாரான நாச்சிமுத்துக்கவுண்டர் 27.06.1955–ம் தேதியன்று பு.ஏ.4.31 2/3 விஸ்தீரணத்தை கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளார் என்றால் அந்த விவரம்

தவறானாது ஆகும். அந்த ஆவணத்தின் படி நான் இந்த வழக்கினை நடத்தவில்லை என்றால் சரிதான்.

2. எனது கணவர் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையரால் தாவா சொத்தானது அளவீடு செய்யப்பட்டது என்றால் தாவா சொத்து அளக்கப்படவில்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு வந்த போது நான் அந்த இடத்தில் இருந்தேன். நீதிமன்ற ஆணையரால் தாவா சொத்தானது அளந்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது தவறானது. அவ்வாறு அளவீடு செய்யப்பட்ட போது எனது வழக்கறிஞர் வந்திருந்தார்.

3. எனது மாமனார் கிரையம் பெற்ற தாவா சொத்தில் வடபுறத்தில் 02.05.2015–ம் தேதியன்று எனது கணவர் 2 ஏக்கர் 10 செண்ட் விஸ்தீரண பூமியை கிரையம் செய்து விட்டார் என்றால் சரிதான். எனது மாமனார் கிரையம் பெற்ற சொத்தில் 2 ஏக்கர் 10 செண்ட் விற்பனை செய்தது போக எங்களுக்கு 2 ஏக்கர் 21 2/3 விஸ்தீரணம் மட்டுமே தற்போது பாத்தியம் என்றால் சரியல்ல. எனது மாமனார் 4 ஏக்கர் 47 1/2 செண்ட் கிரையம் பெற்றதற்கான ஆவணம் எனது கணவர் வசம் உள்ளது. எனது மாமனார் கிரையம் பெற்ற சொத்தில் விற்பனை செய்தது போக எனக்கு 2 ஏக்கர் 21 2/3 விஸ்தீரணம் மட்டுமே பாத்தியம் உள்ள நிலையில் நான் தற்போது 2 ஏக்கர் 37 செண்ட் பாத்தியம் என்று பொய்யாக வாதிடுகிறேன் என்றால் சரியல்ல.

4. எனது கணவருக்கு பாத்தியம் இல்லாத அதிக விஸ்தீரணத்தை எனது கணவர் உரிமை கோருவதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு எவ்வளவு பூமி பாத்தியப்பட்டது என்றும்

எவ்வளவு பூமி விற்பனை செய்யப்பட்டது என்றும் எனக்குத் தெரியாது. தற்போது பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வளவு பாத்தியம் உள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது. எனது கணவர் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிவடைந்தது</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /R.பாண்டி மகாராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.